සියලු ම හිමිකම් ඇවිරිණි]
(முழுப் பதிப்புரிமையுடையது)
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை சட்டக் கல்லூரியின் கல்வியாண்டு 2019 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2018 செப்தெம்பர்**

Competitive Examination for Admission of Students to Sri Lanka Law College for Academic Year 2019 - September 2018

**(02) பொது அறிவு மற்றும் நுண்ணறிவு**
General Knowledge and Intelligence


இரண்டு மணித்தியாலம்
Two hours

## பகுதி I - பொது அறிவு Part I - General Knowledge

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.



✳ விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.

**1 2 3 4**

உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலும் எழுதுக.

......................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

......................................
நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம் :**

✳ பாட இலக்கம் (02) பொது அறிவு மற்றும் நுண்ணறிவு வினாத்தாளானது பகுதி I பொது அறிவும், பகுதி II நுண்ணறிவு ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது.

✳ **இரு பகுதிகளுக்காகவுமான** நேரம் **இரு** மணித்தியாலங்கள் ஆகும்.

✳ பகுதி I பொது அறிவு **06** பக்கங்களில் **50** வினாக்களைக் கொண்டுள்ளது.

✳ **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.

✳ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✳ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

✳ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

✳ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**

✳ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.

✳ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண் மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 11 | |
| 3 | 12 - 21 | |
| 4 | 22 - 30 | |
| 5 | 31 - 44 | |
| 6 | 45 - 50 | |
| மொத்தம் | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் 1 | |
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் 2 | |
| மதிப்பீட்டுப் புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |
| பிரதம பரீட்சகர் | |

[பக். 2 ஐப் பார்க்க

● **1** தொடக்கம் **30** வரையிலான ஒவ்வொரு வினாவிற்குமுரிய **மிகச் சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** அல்லது **மிகக் கிட்டிய விடையினைத்** தெரிவு செய்து, அதற்குரிய **இலக்கத்தை** வினாவிற்கு எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. இலங்கையின் பரப்பளவு சதுர கிலோமீற்றரில் எவ்வளவு?
   (1) 65,610 (2) 66,360 (3) 67,630 (4) 68,410 (.........)

2. 2017 ஆம் ஆண்டின் மத்திய வங்கி அறிக்கையின் படி, இலங்கை ஊழியர் படையின் வீதமாக 2017 இல் நிலவிய வேலையின்மை வீதம் எவ்வளவு?
   (1) 3.1% (2) 4.2% (3) 4.8% (4) 5.1% (.........)

3. பின்வருவனவற்றுள் ஐக்கிய இராச்சியத்துக்குரிய தொலைபேசி எண்ணாக அமையக்கூடியது எதுவாகும்?
   (1) +44 7404030651 (2) +91 7404030651 (3) +33 7404030651 (4) +61 7404030651 (.........)

4. 2017 ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கி அறிக்கையின்படி 2017 ஆம் ஆண்டிலே இலங்கையில் காணப்பட்ட ஒவ்வொரு ஆயிரத்திற்கு மொத்த இறப்பு வீதம் எவ்வளவாகும்?
   (1) 16.5 (2) 14.1 (3) 8.5 (4) 6.5 (.........)

5. இலங்கையின் வடமேல் மாகாணத்தில் சுண்ணக்கல் அடையல் படிவுகள் எப் புவிச்சரிதவியல் காலத்தில் உருவானது?
   (1) பிளையோசீன் காலம் (2) பிளிஸ்டோசீன் காலம்
   (3) மயோசீன் காலம் (4) ஒலிகோசீன் காலம் (.........)

6. 2017 ஆம் ஆண்டிலே இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி, 2017 ஆம் ஆண்டில் நாட்டின் கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதியானது மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக,
   (1) 1.2% (2) 1.9% (3) 3.5% (4) 6.2% (.........)

7. மரவள்ளிக்கிழங்குடன் இஞ்சியை சேர்த்துண்பதால் உடலில் நச்சுத் தன்மை உருவாகுவது எந்த இரசாயனத்தின் தாக்கத்தினால் ஆகும்?
   (1) பொட்டாசியம் (2) ஆசனிக் (3) சயனைட் (4) மகனீசியம் (.........)

8. அண்மையில் நடந்து முடிந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெற்றது?
   (1) இந்தியா (2) தாய்லாந்து (3) இந்தோனேசியா (4) பிலிப்பைன் (.........)

9. ராயிக்வாண்டோ (Taekwondo) எனும் விளையாட்டானது எந்த நாட்டில் இருந்து தோற்றம் பெற்றதாகும்?
   (1) சீனா (2) தென்கொரியா
   (3) தாய்லாந்து (4) யப்பான் (.........)

10. 2017 ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் பிரகாரம், இலங்கை பாகிஸ்தான் நாட்டுடன் செய்து கொண்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் இலங்கை, பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி **செய்யாத** பொருள் எது?
    (1) தேயிலை (2) வெற்றிலை
    (3) இறப்பர் உற்பத்திப் பொருட்கள் (4) கிராம்பு (.........)

11. 2017 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கி அறிக்கையின்படி 2017 ஆம் ஆண்டில் இந்நாட்டிற்குள் வந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையினை நாடுகளின் அடிப்படையில் இறங்குவரிசையில் குறிப்பிடும் போது சரியான வரிசையாக அமைவது எதுவாகும்?
    (1) இந்தியா, ஐக்கிய இராச்சியம், சீனா, ஜேர்மனி
    (2) சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி
    (3) சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, இந்தியா
    (4) இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி (.........)

[பக். 3 ஐப் பார்க்க

12. "முறைதகா பாலுறவு (Incest)" என்பதன் கீழ் தவறாகக் கொள்ளப்படுவது பின்வருவனவற்றுள் எதுவாகும்?
   (1) சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துதல்
   (2) கப்பம் பெறுவதற்காக சிறுவர்களை கடத்துதல்
   (3) பெற்றோரின் ஒருவரது பாட்டனார் தனது பேரப்பிள்ளையுடன் பாலியல் உறவில் ஈடுபடல்
   (4) உளவியல் குறைபாடு காரணமாக அப்பாவித்தனமான பெண்ணுடன் பாலியல் உறவில் ஈடுபடல் (.........)

13. சந்தேக நபரொருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட பின்னர் நீதவான் முன்னிலையில் ஒப்படைக்கப்பட வேண்டியது,
   (1) 12 மணித்தியாலங்கள் முடிவடைவதற்குள்
   (2) 24 மணித்தியாலங்கள் முடிவடைவதற்குள்
   (3) 72 மணித்தியாலங்கள் முடிவடைவதற்குள்
   (4) ஆரம்பக்கட்ட விசாரணை முடிவடைந்தவுடன் (.........)

14. முற்கூட்டியே வீசா பெறாமல் இலங்கையர் செல்லக்கூடிய நாடானது,
   (1) இந்தியா (2) குவைட்
   (3) சவூதி அரேபியா (4) சிங்கப்பூர் (.........)

15. பின்வருவனவற்றுள் 'Residency' எனும் உத்தியோகபூர்வ பங்களாவில் வசிக்கும் இந்நாட்டுக்குரியவர் யார்?
   (1) அரச அதிபர் (2) சபாநாயகர்
   (3) பிரதம நீதவான் (4) சட்டமா அதிபர் (.........)

16. தேசமொன்றின் அதிகாரங்களை பிரித்தல் தொடர்பான அடிப்படை தத்துவங்களை முன்வைத்தவர் யார்?
   (1) டய்சி (Dicey) (2) யஸ்டினியன் (Justinian)
   (3) அரிஸ்டோட்டில் (Aristotle) (4) மொன்டேஸ்கியு (Montesquieu) (.........)

17. மனித பரிணாம வளர்ச்சியில் முதன்முறையாக தமது பயன்பாட்டுக்காக கருவிகளை செய்தவர்கள் பின்வருவோர்களில் யார்?
   (1) ஹோமோ இரக்டஸ் (Homo erectus)
   (2) ஹோமோ நியாண்டர்தலினஸ் (Homo neanderthalensis)
   (3) ஹோமோ ஹெபிலஸ் (Homo habilis)
   (4) ஒஸ்ரோலோபிதெகஸ் (Australopithecus) (.........)

18. வானொலி அலைவரிசைகளில் உள்ள 'AM' என்ற சுருக்கப்பதம் கீழே தரப்பட்டுள்ளவற்றில் எதிலிருந்து தோற்றம் பெற்றுள்ளது?
   (1) Angelo Marconi (2) Anno Madian
   (3) Amperes (4) Amplitude Modulation (.........)

19. இலங்கை தவிர, வேறு எந்த நாட்டில் உரோமன் டச்சு சட்டம் (Roman Dutch Law) நடைமுறையில் உள்ள நாடு;
   (1) ஹொலண்ட் (2) தென் ஆபிரிக்கா
   (3) பிரேசில் (4) இந்தோனேசியா (.........)

20. இந்நாட்டின் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டிருப்பது 1947 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் எப்பிரிவின் கீழாகும்?
   (1) 14 ஆம் பிரிவு (2) 32 ஆம் பிரிவு
   (3) 29 ஆம் பிரிவு (4) 43 ஆம் பிரிவு (.........)

21. இறுவட்டு (CD) ஒன்றில் தரவுகளை பதிவு செய்யப்படக்கூடிய மிகக்கூடிய கொள்ளளவு எவ்வளவு?
   (1) 200 MB (2) 300 MB (3) 500 MB (4) 700 MB (.........)

[பக். 4 ஐப் பார்க்க

22. எந்தவொரு தொழில் வழங்குநரின் மூலம் ஊழியரொருவர் சேவையில் இருந்து நீக்கப்படும் போது, அந்த ஊழியர் எத்தனை தொழிலாளர் நீதிமன்றில் நிவாரணத்தைப் பெறவேண்டும் எனின், அதற்காக முறைப்பாடு செய்ய வேண்டியது,
   (1) 30 நாட்கள் முடிவடைய முன்னர் (2) 06 கிழமை முடிவடைய முன்னர்
   (3) 03 மாதங்கள் முடிவடைய முன்னர் (4) 06 மாதங்கள் முடிவடைய முன்னர் (.........)

23. 1815 ஆம் ஆண்டு கண்டி ஒப்பந்தத்தினை பிரதானமாக வரைவு செய்தவராகக் கருதப்படுபவர் யார்?
   (1) ஜோன் டொலி (John D'oyly)
   (2) ரோபேர்ட் பிரௌவ்ன்ரிக் (Robert Brownrigg)
   (3) கெமரூன் (Cameron)
   (4) ஹென்ரி டெய்லர் (Henry Tailor) (.........)

24. இந்நாட்டின் நீதிமன்றங்களினால் வழங்கப்படும் தீர்ப்புக்கள் தொடர்பாக பிரித்தானியாவின் பிரிவி (Privy) சபைக்கு மேன்முறையீடு செய்யும் நடைமுறை முடிவுக்கு வந்த ஆண்டு,
   (1) 1933 ஆகும் (2) 1948 ஆகும் (3) 1972 ஆகும் (4) 1978 ஆகும் (.........)

25. அண்மையில் காலமான இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் இன் பதவிக் காலம் தொடர்பாக **உண்மையற்ற** கூற்று பின்வருவனவற்றுள் எதுவாகும்?
   (1) இவரது பதவிக் காலத்தில் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் போர் ஏற்படவில்லை.
   (2) இவர் மூன்று தடவைகள் பிரதமராக பதவி வகித்தார்.
   (3) இவர் இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் தொடரூந்து சேவையினை உருவாக்க காரணமானார்.
   (4) பாகிஸ்தானுக்கு எதிரான கார்கில் போரில் இந்தியாவிற்கு தலைமை வழங்கியவர் ஆவார். (.........)

26. உலக சந்தையில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதிக்கு தற்காலத்தில் போட்டியாக உள்ள நாடுகள் எவை?
   (1) இந்தோனேஷியா மற்றும் துருக்கி (2) இந்தியா மற்றும் கென்யா
   (3) இந்தியா மற்றும் சீனா (4) சீனா மற்றும் கென்யா (.........)

27. தற்போதைய அரசியலமைப்பின் படி ஆரம்பத்தில் 'தேசிய மொழியாக' காணப்பட்டிருந்த தமிழ்மொழி 'அரச கரும மொழியாக' மாற்றமடைந்தது பின்வரும் எந்த அரசியலமைப்பின் திருத்தத்தின் மூலமாகும்?
   (1) 6 ஆவது அரசியலமைப்பு திருத்தம்
   (2) 12 ஆவது அரசியலமைப்பு திருத்தம்
   (3) 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம்
   (4) 16 ஆவது அரசியலமைப்பு திருத்தம் (.........)

28. எலிகளின் சிறுநீரினால் மனித உடலில் நுழையும் விஷக் கிருமியினால் உருவாகும் நோய் எதுவாகும்?
   (1) லெப்டோஸ் பயிரோசிஸ் (2) மெனின்யய்டிஸ்
   (3) சிக்குன்குன்யா (4) டொக்சோப்லாஸ்மோஸிஸ் (.........)

29. 2017 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி, செல்லிடத் தொலைபேசிகள் உள்ளடங்கலாக, 2017 ஆம் ஆண்டில் இலங்கையில் தொலைபேசிப் பாவனையின் விகிதம் யாது?
   (1) 100 பேரிற்கு 88 தொலைபேசிகள் (2) 100 பேரிற்கு 126 தொலைபேசிகள்
   (3) 100 பேரிற்கு 184 தொலைபேசிகள் (4) 100 பேரிற்கு 143 தொலைபேசிகள் (.........)

30. குற்றம் சாட்டப்பட்டவர் ஒருவரின் வாக்குமூலம் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுவது அது யார் முன்னிலையில் வழங்கப்படும் போதாகும்?
   (1) சமாதான நீதவான்
   (2) நீதவான்
   (3) உறுதிமொழி ஆணையாளராக உள்ள சட்ட வழக்கறிஞர்
   (4) உதவி பொலிஸ் மேலதிகாரியாக அல்லது அதற்கு மேல் பதவி வகிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் (.........)

/பக். 5 ஐப் பார்க்க

● **31** தொடக்கம் **50** வரையான ஒவ்வொரு வினாக்களுக்கும் **சரியான விடையினை** தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டில்** எழுதுக.

31. அரச நிதிமூலங்களை முறைகேடாகப் பாவித்தல் மற்றும் இலஞ்சம், ஊழல்களை தேடியறிந்து நீதியை நிலைநாட்டுவதற்காக அண்மையில் உருவாக்கப்பட்டுள்ள சிறப்பு உயர்நீதிமன்றின் மூவர் அடங்கிய நீதிபதிகளின் தலைவர் யார்?

.......................................................................................................................................

32. 2017 ஆம் ஆண்டு, இந்நாட்டின் நன்னீர் மீன்பிடி உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்திய இறால்களுக்கு தொற்றிய நோய் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது?

.......................................................................................................................................

33. மாத்தளை மாவட்டத்தில் 'இப்பன்கட்டுவ' எனுமிடத்தில் எத்தகைய தொல்பொருள் சிதைவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?

.......................................................................................................................................

34. "சட்டத்தின் ஆட்சி (Rule of Law)" தொடர்பான கோட்பாட்டை அறிமுகம் செய்தவர் யார்?

.......................................................................................................................................

35. புவிச்சரிதவியலாளர்கள், 'உலகில் மறைந்திருந்த 8 ஆவது கண்டத்தினை' எப்பெயர் கொண்டு அழைப்பர்?

.......................................................................................................................................

36. இலங்கை மற்றும் சீனா ஆகிய நாடுகளிடையே வரலாற்று ரீதியான இறப்பர் - அரிசி ஒப்பந்தத்துக்கு இலங்கை சார்பாக கையொப்பமிட்டவர் யார்?

.......................................................................................................................................

37. 'டெசிபல்' அலகு எதனை அளப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது?

.......................................................................................................................................

38. நிருவாக அதிகாரி அல்லது அரச உத்தியோகத்தர் ஒருவர் மூலம் நிறைவேற்றப்படவேண்டிய யாதாயினும் கடமையினை நிறைவேற்ற கட்டளையிடவேண்டி மேன்முறையீட்டு நீதிமன்றில் பெறவேண்டிய நீதிப் (Writ) பேராணை எது?

.......................................................................................................................................

39. இலங்கை வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி, இந்தியாவின் காலிங்க தேசத்துடன் போரினைப் பிரகடனம் செய்த இலங்கை மன்னன் யார்?

.......................................................................................................................................

40. சர்வதேச நீதிமன்றில் நீதியரசராகவும், அதன் பிரதித் தலைவராகவும் கடமையாற்றிய இலங்கையின் முன்னணி நீதவான் யார்?

.......................................................................................................................................

41. இந்நாட்டின் உச்ச நீதிமன்றம் நீங்கலாக ஏனைய நீதிமன்றங்களின் அதிகாரங்கள் தொடர்பான ஏற்பாடுகள் எந்த சட்டமூலத்தின் பிரகாரமாகும்?

.......................................................................................................................................

42. இந்நாட்டில் நிறைவேற்றுக் குழு முறை நடைமுறைப்படுத்தப்படுவது எந்த சட்டமூல மறுசீரமைப்புக்களின் பரிந்துரைகளின் கீழாகும்?

.......................................................................................................................................

43. இலங்கை மத்திய வங்கியின் 'நாணய சபையின் (Monetary Board)' தற்போதைய தலைவர் யார்?

.......................................................................................................................................

44. 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஆட்சியிலுள்ள கட்சியினரால் முன்வைக்கப்பட்ட ஆனால் ஆட்சியிலுள்ள கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களால் எதிராக வாக்களிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்ட ஆவணம் எது?

.......................................................................................................................................

/பக். 6 ஐப் பார்க்க

45. இறக்குமதிக்காக தடைவிதிக்கப்பட்டிருந்த, தேயிலை மற்றும் இறப்பர் செய்கையின் தேவைக்காக அண்மையில் தடைநீக்கம் செய்யப்பட்ட களைநாசினி எது?

.......................................................................................................................................

46. பிரித்தானியாவின் ஆட்சிக் காலத்தில் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையில் காணப்பட்ட தேச எல்லை எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டது?

.......................................................................................................................................

47. இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராக அண்மையில் நியமிக்கப்பட்டவர் யார்?

.......................................................................................................................................

48. 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாஸா நிறுவனம் மூலம் சூரியனின் ஒளி வட்டத்தினை கண்காணிக்கவென அனுப்பப்பட்ட விண்வெளிக்கலத்தின் பெயர் என்ன?

.......................................................................................................................................

49. தற்போதைய அரசியலமைப்பின்படி, 'நிருவாகப் பொறுப்புகளுக்காக பாராளுமன்ற ஆணையாளராக' யார் பதவி வகிக்கின்றார்?

.......................................................................................................................................

50. ஒவ்வொரு ஆண்டிலும் உலக சுற்றாடல் தினம் அனுஷ்டிக்கப்படுவது எப்போது ஆகும்?

.......................................................................................................................................

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை சட்டக் கல்லூரியின் கல்வியாண்டு 2019 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2018 செப்தெம்பர்**

Competitive Examination for Admission of Students to Sri Lanka Law College for Academic Year 2019 - September 2018

**(02) பொது அறிவு மற்றும் நுண்ணறிவு**
General Knowledge and Intelligence

இரண்டு மணித்தியாலம்
Two hours

**பகுதி II - நுண்ணறிவு Part II - Intelligence**

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

**மிக முக்கியம் :**

விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.



✳ விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.

**1 2 3 4 5**

உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் மற்றும் ஐந்தாம் பக்கங்களிலும் எழுதுக.

.....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................
நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம் :**

✳ பாட இலக்கம் **(02)** பொது அறிவு மற்றும் நுண்ணறிவு வினாத்தாளானது பகுதி I பொது அறிவும், பகுதி II நுண்ணறிவு ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது.

✳ **இரு பகுதிகளுக்காகவுமான** நேரம் இரு மணித்தியாலங்கள் ஆகும்.

✳ பகுதி II நுண்ணறிவு **12** பக்கங்களில் **50** வினாக்களைக் கொண்டுள்ளது.

✳ **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத்தாளிலேயே** எழுதுக.

✳ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✳ பகுதி I மற்றும் பகுதி II இனது வினாத்தாளை வெவ்வேறாக மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.

✳ **கணிப்பான்களைப் பயன்படுத்த முடியாது.**

✳ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

✳ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

✳ **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.

✳ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.

✳ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண் மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 8 | |
| 3 | 9 - 12 | |
| 4 | 13 - 16 | |
| 5 | 17 - 21 | |
| 6 | 22 - 25 | |
| 7 | 26 - 29 | |
| 8 | 30 - 31 | |
| 9 | 32 - 36 | |
| 10 | 37 - 40 | |
| 11 | 41 - 45 | |
| 12 | 46 - 50 | |
| மொத்தம் | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் 1 | |
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் 2 | |
| மதிப்பீட்டுப் புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |
| பிரதம பரீட்சகர் | |

[பக். 2 ஐப் பார்க்க

● **1** தொடக்கம் **5** வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் ஒன்றிற்கொன்று குறித்த தொடர்பொன்றைக் காட்டும் மூன்று சொற்கள் / எழுத்துக்கள் ஆரம்பத்திலே தரப்பட்டுள்ளன. அந்த மூன்று சொற்களில் / எழுத்துக்களில் காணப்படும் தொடர்பை கொண்டுள்ள வேறு மூன்று சொற்கள் / எழுத்துக்கள் அதன் எதிரே எழுதப்பட வேண்டும். அந்த மூன்று சொற்களில் / எழுத்துக்களில் இரண்டு தரப்பட்டுள்ளதுடன் **?** என்ற குறியீட்டுடன் கூடிய இடத்தில் இருக்க வேண்டிய சொல்லை / எழுத்தை தெரிவு செய்து அதன் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

1. பேருந்து : கார் : முச்சக்கரவண்டி சிலந்தி : ……?… : காகம்
   (1) பூரான் (2) பாம்பு (3) பசு (4) கோழி (………)

2. பலா மரம் : தென்னை மரம் : வாழை மரம் ……?… : கித்துள் மரம் : அன்னாசி மரம்
   (1) மாமரம் (2) தேசிக்காய் மரம் (3) கரும்பு மரம் (4) கற்றாளை மரம் (………)

3. மூன்று : ஆறு : பத்து ஆறு : பதின்மூன்று : …?……
   (1) ஒன்பது (2) பதினைந்து (3) இருபத்தொன்று (4) இருபத்தைந்து (………)

4. *A* : *D* : *G* *O* : ……?… : *U*
   (1) *H* (2) *P* (3) *T* (4) *R* (………)

5. ஆறு : சமுத்திரம் : கடல் கிராமம் : ……?… : மாவட்டம்
   (1) தேர்தல் தொகுதி (2) வலயம் (3) மாகாணம் (4) கோட்டம் (………)

● **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் தர்க்க ரீதியான முடிவுகளுக்கு வருதல் தொடர்பானதாகும். இங்கு ஒவ்வொரு வினாவிலும் முதலில் இரு கூற்றுகள் தரப்பட்டுள்ளன. அதற்கேற்ப பெறக்கூடியதென காட்டப்படும் இரு முடிவுகளும் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்கும் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பினும் தர்க்கரீதியாக பெறக்கூடிய தீர்மானம் எனின் அதற்கேற்ப கீழே காட்டப்படும் முடிவுகளில் ஒன்றிற்கு வரக்கூடியதாக உள்ள விடையிற்குரிய **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

*A* - 1 ஆவது முடிவு மட்டும் உண்மையாகும்
*B* - 2 ஆவது முடிவு மட்டும் உண்மையாகும்.
*C* - 1 அல்லது 2 போன்ற முடிவுகள் உண்மையாகும்.
*D* - 1 மற்றும் 2 போன்ற இரண்டும் பொய்யானவை.
*E* - 1 மற்றும் 2 போன்ற இரண்டும் உண்மையாகும்.

6. கூற்று I : குதிரைகள் எல்லாம் நாய்களாகும்.
   II : நாய்கள் எல்லாம் எலிகளாகும்.
   முடிவு 1 : குதிரைகள் எல்லாம் எலிகளாக இருக்க வேண்டும்.
   2 : எலிகள் எல்லாம் நாய்களாக இருக்க வேண்டும்.
   முடிவுகளுள் உண்மையானது
   (1) *A* (2) *B* (3) *C* (4) *D* (………)

7. கூற்று I : எந்தவொரு நாணயக் குற்றியும் ஒரு ரூபாய் குற்றி இல்லை.
   II : வெள்ளித்துண்டு ஒரு நாணயமாகும்.
   முடிவு 1 : வெள்ளித்துண்டு ஒரு ரூபாய் குற்றி இல்லை.
   2 : வெள்ளித்துண்டு ஒரு ரூபாய் குற்றியாக இருக்க இடமுள்ளது.
   முடிவுகளுள் உண்மையானது
   (1) *A* (2) *B* (3) *C* (4) *E* (………)

8. கூற்று I : தந்தைமார் எல்லோரும் மகன்மாராகும்.
   II : மகன்மார் எவரும் கற்றவர்கள் இல்லை.
   முடிவு 1 : சில தந்தைமார் கற்றவர்களாவார்கள்.
   2 : தந்தைமார் அல்லாத மகன்கள் கற்றவர்கள் ஆவார்கள்.
   முடிவுகளுள் உண்மையானது
   (1) *B* (2) *C* (3) *D* (4) *E* (………)

/பக். 3 ஐப் பார்க்க

9. கூற்று I : எல்லாக் கோப்பைகளும் தட்டுக்களாகும்.
II : தட்டுகள் எதுவும் கேத்தலொன்றாக இல்லை.
முடிவு 1 : எந்தக் கோப்பையும் கேத்தலொன்றாக இல்லை.
2 : எந்தக் கேத்தலும் கோப்பையொன்றாக இல்லை.
முடிவுகளுள் உண்மையானது
(1) *A* (2) *B* (3) *C* (4) *E* (.........)

10. கூற்று I : புத்தகங்கள் எல்லாம் நாவல்களாகும்.
II : நாவல்கள் சில சிறுகதைகளாகும்.
முடிவு 1 : சில புத்தகங்கள் சிறுகதைகளாகும்.
2 : எந்தப் புத்தகமும் நாவல்கள் இல்லை.
முடிவுகளுள் உண்மையானது
(1) *A* (2) *B* (3) *C* (4) *D* (.........)

● **11** தொடக்கம் **15** வரையிலான வினாக்கள் கீழே தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

* சட்டக் கல்லூரியின் விவாதக் குழுவிற்காக ஆண் மாணவர்கள் இருவரும் மாணவிகள் இருவரும் தெரிவு செய்யப்படவேண்டும்.
* அதற்காக நடைபெற்ற ஆரம்பத் தெரிவின் போது மூன்று மாணவிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.
* அவர்கள் அமலா, விமலா, நிமலா என்போர்களாவார்கள்.
* ஆண் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தது நான்கு பேர் மட்டுமாகும்.
* அவர்கள் விமலன், நிமலன், பிரமன், ரங்கன் என்போர்களாவார்கள்.
* விமலா என்பவர் விமலனுடன் ஒன்றாக செயற்படுவதற்கு விருப்பமில்லை.
* நிமலா என்பவர் பிரமனுடன் ஒன்றாக செயற்படுவதற்கு விருப்பமில்லை.
* பிரமன் என்பவர் நிமலனுடன் ஒன்றாக செயற்படுவதற்கு விருப்பமில்லை.

இதற்கேற்ப சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

11. ஆரம்ப தெரிவிலே விமலன் என்பவர் அகற்றப்பட்டாரெனின் அந்தக் குழுவின் இணைப்பு இவற்றுள் எதுவாக இருக்க முடியும்?
(1) ரங்கன், நிமலன், அமலா, நிமலா (2) நிமலன், பிரமன், அமலன், நிமலா
(3) நிமலன், பிரமன், அமலா, விமலா (4) ரங்கன், பிரமன், அமலா, நிமலா (.........)

12. தெரிவு செய்யப்பட்ட குழுவிலே விமலன் இருந்தால் குழுவிற்குத் தெரிவு செய்யப்படும் ஏனையவர்கள் யார்?
(1) நிமலன், விமலா, நிமலா (2) பிரமன், அமலா, நிமலா
(3) ரங்கன், அமலா, நிமலா (4) ரங்கன், விமலா, நிமலா (.........)

செய்கைவழி :

[பக். 4 ஐப் பார்க்க

13. விமலா மற்றும் நிமலா போன்ற இருவரும் தெரிவு செய்யப்பட்டால் மற்றைய யார் நிச்சயமாக தெரிவு செய்யப்படுவார்கள்?

(1) விமலன் மற்றும் நிமலன்
(2) நிமலன் மற்றும் ரங்கன்
(3) பிரமன் மட்டும்
(4) ரங்கன் மட்டும் (………)

14. இதில் எது **தவறானதாகும்?**

I. நிமலன் மற்றும் நிமலா ஆகியோர் தெரிவு செய்யப்பட முடியாது
II. பிரமன் மற்றும் விமலா ஆகியோர் தெரிவு செய்யப்பட முடியாது
III. ரங்கன் மற்றும் நிமலா ஆகியோர் தெரிவு செய்யப்பட முடியாது


(1) I மட்டும்
(2) II மட்டும்
(3) III மட்டும்
(4) I, II, III போன்ற எல்லாம் (………)

15. அமலா தொடர்பாக இவற்றுள் உண்மையானது எது?

I. அமலா நிச்சயமாக தெரிவு செய்யப்படவேண்டும்.
II. பிரமன் தெரிவு செய்யப்பட்டால் அமலாவும் தெரிவு செய்யப்படுவார்.
III. விமலன் மற்றும் பிரமன் போன்ற இருவரும் தெரிவு செய்யப்பட்டால் அமலாவை தெரிவு செய்யமுடியாது.

(1) I மட்டும் (2) II மட்டும் (3) III மட்டும் (4) I மற்றும் III மட்டும் (………)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள வினாக்கள் சட்டத்தரணிகளின் அலுவலகத்திற்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆறு அறைகளை கொண்ட கட்டடமொன்றில் உள்ள ஆறு அறைகளை ஒதுக்குவது பற்றியதாகும்.




✤ இந்த அறைகள் *A, B, C, D, E, F* என்ற சட்டத்தரணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் நடுவே விறாந்தையும் அதன் இருபுறமும் மூன்று அறைகள் என்றவாறும் அமைக்கப்பட்டுள்ளன.

- ✳ விறாந்தையின் வலது பக்க அறைகள் இரண்டும் *B* மற்றும் *C* இற்கு வழங்கப்பட்டுள்ளன.
- ✳ *A* யிற்கு வழங்கியிருப்பது இடதுபக்க அறையாகும்.
- ✳ *E* யிற்கும் *F* இற்கும் கிடைத்திருப்பது விறாந்தையின் இருபுறமும் ஒன்றையொன்று பார்த்திருக்கும் இரு அறைகளாகும்.
- ✳ *C* யிற்கும் *D* இற்கும் கிடைத்திருப்பது விறாந்தையின் இருபுறமும் ஒன்றையொன்று பார்த்திருக்கும் இரு அறைகளாகும்.
- ✳ *E* விருப்பத்துடன் இருந்தாலும் கட்டடத்தினது ஓரமொன்றிலே அறையொன்று கிடைக்கவில்லை.
- ✳ *F* இற்கு கிடைத்தது *A* யினது அறையிற்கு அதன் பின்னால் அதேபக்கத்தில் உள்ள அறையொன்றாகும்.

இந்த தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையை தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

16. *E* என்பவர் தனது அறையில் இருந்து விறாந்தையைப் பார்த்தவாறு அமரும் போது அவரது இடதுபக்க அறை ஒதுக்கப்பட்டிருப்பது இவர்களுள் யாருக்காகும்?

(1) *A* (2) *B* (3) *C* (4) *D* (………)

**செய்கைவழி :**

[பக். 5 ஐப் பார்க்க

17. *A* யினது அறையினை பார்த்து இருப்பது யாரினது அறையாகும்?

(1) *B* (2) *C* (3) *D* (4) *E* (.........)

18. *F* இனது அருகில் உள்ள அறை கிடைக்கப் பெற்றிருப்பது யாருக்காகும்?

(1) *A* யிற்கு மட்டும் (2) *C* யிற்கு மட்டும்
(3) *A* யிற்கும் *D* யிற்கும் (4) *B* யிற்கும் *C* யிற்கும் (.........)

19. தனது சட்டத்தரணியினது அறை அல்லாத வாடிக்கையாளர் ஒருவருக்கு இன்னும் ஒருவர் வழிகாட்டியது இவ்வாறாகும்.

"இந்த விறாந்தையிலே வலது பக்கத்தின் ஓரத்தில் உள்ள அறைதான் அவரினது அறையாகும்."

அது யாரினது அறையாகும்?

(1) *A* (2) *B* (3) *C* (4) *F* (.........)

20. நான்கு மூலைகளிலும் உள்ள அறைகள் யாருக்கு கிடைத்த அறைகளாகும்?

(1) *D, E, F, A* (2) *C, D, E, F* (3) *B, C, D, E* (4) *A, B, C, D* (.........)

● **21** தொடக்கம் **25** வரையிலான வினாக்கள் "வசீகரா" உடல் ஆரோக்கிய சபையின் அன்றாட கட்டணத்தின் மீது வழங்கப்படும் 50% விசேட கழிவிற்கு உரித்துடைமையாதல் தொடர்பான நீதித்துறையை அடிப்படையாகக் கொண்டது.

'வசீகரா' உடல் ஆரோக்கிய சபையில் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு கீழே குறிப்பிடப்பட்ட நபர்களுக்கு தமது அன்றாட கட்டணத்திற்கு 50% கழிவு கிடைக்கும். அந்த தகைமை இவ்வாறாகும்.

(i) ஆரம்ப கால உறுப்பினர்களுக்கும் அவர்களது துணையிற்கும் அவரது 25 வயதிற்கு குறைந்த பிள்ளைகளுக்கும்
(ii) எந்தவொரு வலது குறைந்த உறுப்பினர்களுக்கு
(iii) 60 வயதிற்கு கூடிய சிரேஷ்ட பிரஜைகளுக்கு
(iv) பாதுகாப்பு பிரிவுகளில் கடமையாற்றுபவர்கள் மற்றும் அதில் இருந்து ஓய்வைப் பெற்றவர்களுக்கும் அவர்களது துணைக்கும் மற்றும் 18 வயதிற்கு குறைந்த அவர்களது பிள்ளைகளுக்கும்
(v) தொழிலொன்றில் ஈடுபடாத 35 வயதிற்கு குறைந்த பெண்களுக்கு
(vi) பதிவு செய்யப்பட்ட சமூக சேவை நிறுவனங்களின் சமூக சேவையாளர்களுக்கு
(vii) 10 வருடங்கள் உறுப்புரிமைக் கட்டணத்தை ஒரேயடியாக செலுத்தி இணைந்து கொண்ட உறுப்பினர்களுக்கு

இந்த தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிலும் குறிப்பிட்ட நபர் கழிவைப் பெறுவதற்கு தகைமையைப் பெற்று உள்ளரா, இல்லையா என தீர்மானித்து அதற்குரிய விடையினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

21. ✳ முப்பத்தைந்து வயதான திருமதி. பாலசந்திரன் என்பவர் அங்கவீனரான படைவீராங்கனையாவார்.
✳ அவரது கணவன் வசீகரா சமூகத்தின் ஆரம்பகால உறுப்பினராவார்.

அதற்கேற்ப திருமதி பாலச்சந்திரனுக்கு

(1) (i) மற்றும் (iv) இன் கீழே தகைமை கிடைக்கும்.
(2) (i) மற்றும் (ii) இன் கீழே தகைமை கிடைக்கும்.
(3) (i), (ii) மற்றும் (iv) இன் கீழ் மட்டும் தகைமை கிடைக்கும்.
(4) தகைமை கிடைக்க மாட்டாது. (.........)

செய்கைவழி :

/பக். 6 ஐப் பார்க்க

22. * தேவதாசன் ரஞ்சனின் வயது 14 வருடங்களாகும்.
* அவர் ஓய்வு பெற்ற படைவீரரான கோப்ரல் ரஞ்சனினது மகனாவார்.
* கோப்ரல் ரஞ்சன் அவர்கள் பிரதேசத்தினது சிரேஷ்ட பிரஜைகளினது தலைவராவார்.
* கோப்ரல் ரஞ்சன் அவர்கள் வசீகரா ஆரோக்கிய சபையில் பத்து வருடங்களின் உறுப்புரிமைக் கட்டணத்தை மூன்று வருடங்களிலே செலுத்துவது என்ற மூன்று தவணைகளில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதற்கேற்ப தேவதாசன் ரஞ்சன்,
(1) (iv) இன் கீழ் மட்டும் தகைமையைப் பெறுவார்.
(2) (vi) மற்றும் (vii) இன் கீழ் தகைமையைப் பெறுவார்.
(3) (iv) மற்றும் (vii) இன் கீழே தகைமையை பெறுவார்.
(4) தகைமையைப் பெறமாட்டார். (.........)

23. * காதர் புகாரி 28 வயதுடையவர்.
* அவர் வசீகரா ஆரோக்கிய சபையின் ஆரம்பகால உறுப்பினரான முகமட் காதரின் மகனாவார்.
* பிரபல்யமான சமூக சேவையாளர் ஒருவரான முகமட் காதர் அவர்கள் பதிவு செய்யப்பட்ட இரத்த வங்கியின் ஆரம்பிப்பாளராவார்.

இதற்கேற்ப காதர் புகாரி,
(1) (i) இன் கீழே மட்டும் தகைமையைப் பெறுவார்.
(2) (vi) இன் கீழ் மட்டும் தகைமையைப் பெறுவார்.
(3) (i) மற்றும் (vi) இன் கீழ் மட்டும் தகைமையைப் பெறுவார்.
(4) தகைமையைப் பெறமாட்டார். (.........)

24. * அனுஷா கந்தசாமி என்பவர் வசீகரா ஆரோக்கிய சபையின் ஆரம்பகால உறுப்பினர் ஒருவரினது 18 வயது நிரம்பிய மகளாவார்.
* சிறந்த நீச்சல் வீராங்கனையான அவர் பிரபல்யமான செஸ் விளையாட்டு வீராங்கனையும் பாடசாலையினது பிரதம மாணவ தலைவியுமாவார்.
* அவரது தந்தை ஓய்வு பெற்ற அரச சேவையாளராவார்.

இதற்கேற்ப அனுஷா கந்தசாமி
(1) (i) இன் கீழ் மட்டும் தகைமையைப் பெறுவார்.
(2) (iv) இன் கீழ் மட்டும் தகைமையைப் பெறுவார்.
(3) (i) மற்றும் (v) இன் கீழ் மட்டும் தகைமையைப் பெறுவார்.
(4) தகைமையைப் பெறமாட்டார். (.........)


25. * 24 வயதுடைய சுமதி ஆசீர்வாதம் என்பவர் பிரபல சமூக சேவையாளரின் மருமகளாவார்.
* வங்கி ஊழியரான அவர் வசீகரா ஆரோக்கிய சபையின் 7 வருடங்களுக்கான உறுப்புரிமைக் கட்டணத்தை ஒரே தடவையில் வழங்கியுள்ளார்.
* அவரது கணவன் இலங்கையின் போர்வீரர்களின் பிரிகேடியர் ஒருவராவார்.

இதற்கமைய சுமதி ஆசீர்வாதம்
(1) (i) இன் கீழ் மட்டும் தகைமையைப் பெறுவார்.
(2) (iv) இன் கீழ் மட்டும் தகைமையைப் பெறுவார்.
(3) (vi) மற்றும் (vii) இன் கீழ் தகைமையுடையவர்.
(4) தகைமையைப் பெறமாட்டார். (.........)


**செய்கைவழி :**


/பக். 7 ஐப் பார்க்க


● **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்காக ஒவ்வொரு வினாவின் ஆரம்பத்திலும் உருவம் ஒன்று தரப்பட்டுள்ளது. அதன் பல்வேறு தோற்றங்கள் திசுத் தாளில் வரையப்பட்டுள்ளதுடன் அதனை புறப்பக்கமாக திருப்பும் போது தெரியும் முறை கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எதுவாக இருக்கமுடியுமென தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.


26. 

புறப்பக்கம் எது?



(1)


(2)



(3)



(4)


(.........)


27. 

புறப்பக்கம் எது?



(1)


(2)



(3)



(4)


(.........)


28. 


புறப்பக்கம் எது?


(1)



(2)


(3)





(4)


(.........)


29. 

புறப்பக்கம் எது?


(1)


(2)



(3)


(4)


(.........)

/பக். 8 ஐப் பார்க்க


30.




புறப்பக்கம் எது?




(1)



(2)



(3)



(4)

(.........)

- **31** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்களிலே காட்டப்படுவது கிராமிய வங்கியொன்றிலே கடனைப் பெற்றுக் கொள்ளும் போது விவசாயி ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய நிபந்தனைகளாகும்.

  ❋ விவசாயி பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் பின்வருமாறு :

  (i) பயிரிடக்கூடிய 8 ஏக்கர் நிலமாவது இருக்க வேண்டும்.

  (ii) 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான அடகு அல்லது பிணையைக் கொண்டிருக்க வேண்டும்.

  (iii) 2019 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதியன்று 50 வயதை விட கூடாது இருக்க வேண்டும்.

  (iv) வங்கியில் இருந்து பெறப்பட்டு மீள செலுத்தாத கடன் இல்லாது இருக்க வேண்டும்.

  (v) பிரதேச செயலாளரினது சிபார்சினைப் பெற்றிருக்க வேண்டும்.

மேலும்,

(அ) இங்கு காட்டப்படும் (i) இனை தவிர ஏனைய நிபந்தனைகளை கொண்டுள்ள விவசாயி ஒருவர் தேவையான பயிர்களை வளர்ப்பதற்குரிய காணித்துண்டுகள் இரண்டைக் கொண்டிருப்பின் அந்த வேண்டுகோள் ஆனது வங்கியினது தலைவரிடம் அனுப்பப்படும்.

(ஆ) இங்கு குறிப்பிட்ட (ii) ஆவது நிபந்தனைகளைக் **கொண்டிராத** விவசாயி ஒருவர் வங்கியிலே 4 இலட்சம் நிலையான வைப்பைக் கொண்டிருப்பின் அந்த விண்ணப்பம் வங்கியின் பொது முகாமையாளருக்கு அனுப்பப்படும்.

இதற்கேற்ப கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிலும் விண்ணப்பிக்கும் விவசாயியினது தகவல்கள் தரப்பட்டுள்ளன. அந்த தகவல்களை அடிப்படையாக கொண்டு ஒவ்வொரு விவசாயி தொடர்பாகவும் எடுக்கும் உமது முடிவானது,

❋ கடன் வசதி செய்து கொடுக்க **முடியாதுவிடின்** **A** எனவும்

❋ கடன் விண்ணப்பப்பத்திரம் வங்கி முகாமையாளரிடம் அனுப்பப்படும் எனின் **B** எனவும்

❋ வழங்கப்பட்டுள்ள தகவல்கள் முடிவைப் பெறுவதற்கு **போதுமானதில்லை** எனின் **C** எனவும்

❋ கடன் வசதி செய்வதற்கு கவனத்தில் கொள்ள முடியுமெனின் **D** எனவும்

❋ கடன் விண்ணப்பப்படிவம் வங்கியின் தலைவருக்கு அனுப்பப்படும் எனின் **E** எனவும்

உரிய **ஆங்கில எழுத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

31. கோணேசமூர்த்தியிடம் ஐந்து ஏக்கர் தென்னங்காணியொன்று உள்ளது. அவருக்கு 8 இலட்சம் பெறுமதியான நான்கு ஏக்கர் மாற்று இடமொன்றும் உள்ளது. அவரது பிறந்த திகதி 1975.05.10 ஆவதுடன் அவர் எந்த வங்கியிலும் கடன் பெற்றிருக்கவில்லை. அவர் பிரதேச செயலாளரினது சிபார்சினையும் பெற்றிருந்தார். (.........)

---

**செய்கைவழி :**

/பக். 9 ஐப் பார்க்க

32. சுப்பிரமணியம் என்பவர் 1971 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆந் திகதி பிறந்த ஒருவராகும். பயிரிடக்கூடிய 4 ஏக்கர் விளைச்சல் இடமொன்றும் அவரிடம் உள்ளது. அது இரண்டு போகங்களில் பயிரிடக்கூடிய இடமாகும். பிணையாக வைக்கக்கூடிய 9 இலட்சம் ரூபா சொத்தும் அவரிடம் உள்ளது. அவர் வங்கியில் கடன் பெற்றிருக்கவில்லை. (.........)


33. விமலன் தேவதாசன் என்பவர் 1975 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆந் திகதி பிறந்தவர். அவரிடமுள்ள ஒரே இடமான 6 ஏக்கர் முழுவதும் தென்னம் பயிர்செய்கையை செய்கிறார். அவர் பிரதேச செயலாளரினது சிபார்சினையும் பெற்றுள்ளார். அவருக்கு 8 இலட்சத்திற்கும் அதிகமாக பிணை வழங்கவும் முடியும். வங்கியில் பெற்றிருந்த கடனில் இருந்து அவர் தற்போது விடுபட்டுள்ளார். (.........)

34. 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் 8 ஆந் திகதி பிறந்த றிஸ்வி காசிமிடம் 8 ஏக்கர் வயல் நிலமொன்று உள்ளது. பிரதேச செயலாளரினது சிபார்சினையும் அவர் பெற்றுள்ளார். அவருக்கு 8 இலட்சம் ரூபா பிணை வழங்கமுடியும். வங்கியிலே 6 இலட்சம் ரூபாய் நிலையான வைப்பை உடைய அவர் எந்த வங்கியிலும் கடனைப் பெற்றிருக்கவில்லை. (.........)

35. நாற்பத்தியெட்டு வயதான விக்னேஸ்வரன் அவர்கள் ஒன்பது ஏக்கரில் நெல் பயிர் செய்கை செய்து வருகிறார். அவர் இரு போகங்களிலே பயிர்செய்கை செய்கிறார். பிரதேச செயலாளரினது சிபாரிசினையும் பெற்றுள்ளார். அடகு அல்லது பிணையைக் கொண்டிருக்கவில்லை. எனினும் அவர் 6 இலட்சம் ரூபாய்களை நிலையாக வைப்பில் இட்டதுள்ளதுடன் அவர் எந்நாளிலேயும் வங்கியிலே கடனைப் பெற்றிருக்கவில்லை. (.........)

- **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களில் ஆரம்பத்திலே படம் ஒன்று தரப்பட்டுள்ளது. அந்தப் படத்திற்கு மிகவும் சமனான தன்மையைக் காட்டும் உருவத்தை கீழே தரப்பட்டுள்ள ஐந்து உருவங்களில் இருந்தும் தெரிவு செய்து அதற்குரிய **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

36.





(1) (2) (3) (4) (5) (.........)

செய்கைவழி :

/பக். 10 ஐப் பார்க்க


37.






(1) (2) (3) (4) (5) (………)


38.






(1) (2) (3) (4) (5) (………)

39.






(1) (2) (3) (4) (5) (………)

40.





(1) (2) (3) (4) (5) (………)

/பக். 11 ஐப் பார்க்க

● **41** தொடக்கம் **45** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் எண் கோலமொன்று காட்டப்பட்டுள்ளது. அவற்றில் ஒவ்வொரு வரிசையிலும் எண்கள் காட்டப்பட்டிருப்பது குறித்தவொரு கோலமொன்றிற்கு அமையவாகும். அதனை நன்கு விளங்கிக் கொண்டு **?** என்ற குறியீட்டினால் காட்டப்படும் சதுரத்தில் இருக்க வேண்டிய எண்ணைக் கண்டு அந்த **எண்ணை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது இலக்கத்தில் மட்டும்** எழுதுக.

41.

| | | | |
|---|---|---|---|
| 6 | 14 | 5 | 4 |
| 8 | 4 | 2 | 6 |
| 9 | 16 | 5 | 5 |
| 7 | 7 | ? | 7 |

(.........)

42.

| | | | |
|---|---|---|---|
| 10 | 2 | 4 | 2 |
| 20 | 4 | 8 | 2 |
| 30 | 15 | 3 | 5 |
| 40 | 8 | ? | 2 |

(.........)

43.

| | | | |
|---|---|---|---|
| 8 | 4 | 2 | 4 |
| 5 | 10 | 4 | 2 |
| 7 | 4 | 8 | 14 |
| 9 | 6 | ? | 3 |

(.........)

44.

| | | | |
|---|---|---|---|
| 5 | 4 | 7 | 6 |
| 8 | 9 | 9 | 10 |
| 7 | 10 | 1 | 4 |
| 12 | 10 | ? | 3 |

(.........)

45.


| | | | |
|---|---|---|---|
| 4 | 2 | 8 | 10 |
| 3 | 2 | 6 | 8 |
| 5 | 3 | 15 | ? |
| 6 | 3 | 18 | 21 |

(.........)

**செய்கைவழி :**

/பக். 12 ஐப் பார்க்க

● **46** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் உருவில் காட்டப்பட்டுள்ள சுவரின் ஓரத்தில் அமைக்கப்பட்டுள்ள சதுரமுகி வடிவிலான தொகுதியை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. அதனை நன்கு அவதானித்து கீழே தரப்பட்ட வினாக்களுக்கான விடைகளை கண்டு அந்த **விடையை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது இலக்கத்தில் மட்டும்** எழுதுக.



46. இந்த சதுரமுகிகளின் தொகுதியிலே எத்தனை சதுரமுகிகள் உள்ளன? (.........)

47. படத்திலே காட்டப்பட்டுள்ளவாறு பார்வைக்கு தெரியும் பக்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு? (.........)

48. படத்திலே பார்வைக்கு **தெரியாத** பக்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு? (.........)

49. இங்கு நிலத்தில் தொடுகையுறும் பக்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு? (.........)

50. இங்கு ஒன்றையொன்று தொடுகையுறும் பக்கச்சோடிகள் எத்தனை உள்ளன? (.........)

---

**செய்கைவழி :**

***